செ.வெ.எண்:38 நாள்: 21.09.2020

# அரியலூர் மாவட்டம்

# பள்ளி சேர்க்கைக்காக கடந்த வாரம் பொதுமக்கள் குறைதீர்நாள் கூட்டத்தில் மனு அளித்த மாணவிக்கு, பள்ளியில் சேர்வதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இணையதளம் வாயிலாக **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(21.09.2020)** நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பொது போக்குவரத்து, இ-பாஸ் ரத்து உள்ளிட்ட பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளதன் அடிப்படையில் பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் இன்று (21.09.2020) (https://ariyalur.nic.in)-ல் என்ற இணையதளத்தில் கூகுள் மீட் (Google Meet) என்ற இணைப்பு மூலம் (Online) காணொளி காட்சி வாயிலாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை நேரடியாக தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. மேலும் இணையவழி வசதி இல்லாத பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயல்பட்டுவரும் பொது சேவை மையங்களின் மூலம் தங்களது கோரிக்கைகள் மனுக்கள் அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இன்று (21.09.2020) இணையவழி மூலம் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் இணையதளம் வழியாக பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக கனிவுடன் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. தொடர்ந்து, வாட்ஸ்சப் மூலமும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் கடந்த வாரம் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் உடையார்பாளையம் வட்டம், இறவாங்குடி கிராமத்தைச் சேர்ந்த வாய்பேச இயலாத மற்றும் 95 சதவீதம் மனநிலை பாதிக்கப்பட்ட திரு.ராஜேந்திரன் என்பவரின் மகள் செல்வி.இரா.ஆர்த்தி என்பவர் தனது தாயார் நான்கு வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாகவும், தனிமையில் வாழும் தான் கடந்த ஆண்டு நடைபெற்ற 10ஆம் பொதுத்தேர்வில் இறவாங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில் பயின்று 365 மதிப்பெண்கள் பெற்றுள்ளதாகவும், மேலும், மேல்நிலை முதலாம் ஆண்டு ஜெயங்கொண்டம் பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இலவசமாக விடுதியில் தங்கி பயிலுவதற்காக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்திருந்தார். மேற்படி, செல்வி.இரா.ஆர்த்தி அவர்களின் மனுவை கனிவுடன் பரிசீலித்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் அதற்கான ஆணையினை இன்று வழங்கினார்.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஜெ.பாலாஜி, உள்ளிட்டவர்களுடன், தொடர்புடைய பிறத்துறை அலுவலர்கள் இணையவழி வாயிலாக கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**